எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரகம், 110, அண்ணா சாலை, சென்னை–2.

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இணை இயக்குநர் (பொ.) அவர்களின் செயல்முறை ஆணைகள்

பிறப்பிப்பவர்: முனைவர்.சி.பாலசுப்பிரமணியன், இணை இயக்குநர் (பொ.)

ஆணையரக செ.மு.ஆ.எண்.இ3/22830/2019 நாள்: 06.06.2022

பொருள்: பணியமைப்பு – எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரகம், சென்னை–2–திருமதி.ச.வரலட்சுமி, பதவி மாற்றல் மூலம் (Recruitment by Transfer) இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டது – பணியில் சேர்ந்த நாளான 30.08.2018 முற்பகல் முதல் பணி வரன்முறை செய்து ஆணையிடுதல் – தொடர்பாக.

பார்வை: இயக்கக செ.மு.ஆணை எண்.இ1/6495/2018, நாள் 28.08.2018.

-----

ஆணை:

பார்வையில் காணும் 28.08.2018 நாளிட்ட இயக்கக செயல்முறை ஆணையின்படி அரசு எழுதுபொருள் அலுவலகம், சென்னை–1–ல் பதிவுரு எழுத்தராக பணியாற்றி வந்த திருமதி.ச.வரலட்சுமி, என்பவருக்கு பதவி மாற்றம் மூலம் (Recruitment by Transfer) pay Matrix Level 8 ரூ.19500–62.000 என்ற நிலை கொண்ட இளநிலை உதவியாளர் பதவியில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் அளித்து ஆணையிடப்பட்டது.

2) இதனைத் தொடர்ந்து, திருமதி.ச.வரலட்சுமி, இளநிலை உதவியாளராக அரசு எழுதுபொருள் அலுவலகம், சென்னை–1ல் 30.08.2018 முற்பகல் பணியேற்பு செய்து பணிபுரிந்து வருகிறார்.

தனியர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 30.08.2018 முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது. மேலும் பணிவரன்முறைப்படுத்தப்பட்ட நாள் முதல், இரண்டு ஆண்டுகால தகுதிகாண் பருவத்தில் வைத்தும் இரண்டாண்டு கால தகுதிகாண் பருவகாலத்தை தொடர்ச்சியான, மூன்றாண்டு காலத்திற்குள் நிறைவு செய்ய வேண்டும் எனவும் மற்றும் தகுதிகாண் பருவ காலத்தில் பவானிசாகரில் உள்ள அரசு அலுவலர்கள் பயிற்சி நிலையத்தில் நடத்தப்படும் அடிப்படை பயிற்சியில் கலந்து கொண்டு தேர்ச்சி பெற வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது.

சி.பாலசுப்பிரமணியன்,
இணை இயக்குநர் (பொ).

**பெறுநர்**

திருமதி.ச.வரலட்சுமி, )(
இளநிலை உதவியாளர், )( அலகுத் தலைவர் மூலமாக
அரசு எழுதுபொருள் அலுவலகம், )(
சென்னை–1. )(

நகல் பெறுநர்

1) உதவி இயக்குநர் (கொள்முதல்), அரசு எழுதுபொருள் அலுவலகம், சென்னை–1.
2) ஆணையரின் நேர்முக உதவியாளர், ஆணையரகம் சென்னை–2.
3) சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சம்பளக் கணக்கு அலுவலகம் (வடக்கு), சென்னை–1.
4) கண்காணிப்பாளர் 'இ' / இ2 இளநிலை உதவியாளர் மற்றும் 'இ4' உதவியாளர், ஆணையரகம், சென்னை–2.

உதிரி – 3 நகல்கள்

நகல் இடம் பெறல்

1. ஆணையர் அவர்களின் மேசைக்கு கனிவான பார்வைக்காக.
2. இணை இயக்குநர் அவர்களின் மேசைக்கு கனிவான பார்வைக்காக.

//உத்தரவின்படி அனுப்பப்படுகிறது//

6/6/22

ஆணையரின் நேர்முக உதவியாளர்(பொ.)

6.6.2022